355

## சுருக்கம்

கல்வித் தகுதி – பொதுப் பணிகளில் நியமனம் செய்ய மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) வர்த்தகப் பொருளியலில் இளங்கலைப்பட்டத்தினை மற்ற அனைத்து பல்கலைக்கழகங்களினாலும் வழங்கப்படும் (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத)பொருளியலில் இளங்கலைப் பட்டத்திற்கு இணையாக கருதி அங்கீகாரம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை.

அரசாணை நிலை எண். 104 நாள் : 12. 8. 2005.

1) அ.ஆ.நிலை எண் 441, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை,, நாள் 20.12.93.

2) கடித எண் B-4/BOS/Economics (UG) 2002, நாள் 30.10.2002 மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திடமிருந்து தேர்வாணையத் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதம்.

3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 7748/ஆர் என்.டி.என்/2002, நாள் 15.7.2003 .

*****

ஆணை:

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிவாளர் தனது 30–10–2002 தேதியிட்ட கடிதத்தில் 2003–2004 கல்வி ஆண்டிலிருந்து (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) பொருளியலில் இளங்கலை பட்டம் எனும் பெயரினை மட்டும் வர்த்தகப் பொருளியலில் இளங்கலை பட்டம் (Bachelor of Business Economics) (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) என்று மாற்றம் செய்திருப்பதாகத் தெரிவித்து மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) வர்த்தகப் பொருளியலில் இளங்கலை பட்டத்தை (Bachelor of Business Economics) இதர பல்கலைக் கழகங்களினால் வழங்கப்படும் (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) பொருளியலில் இளங்கலைப் பட்டத்திற்கு (Bachelor of Economics) இணையாகக் கருதி அங்கீகரிக்குமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினைக் கேட்டுக் கொண்டார்.

2) 20–12–1993 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை (நிலை) எண்.441ல் வெளியிடப்பட்ட ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் தலைவரை, தலைவராகக் கொண்ட, இணைக் கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்புக்குழுவானது 03–07–2003 அன்று மேற்காணும் பொருள் குறித்து

பரிசீலனை செய்து மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் பதிவாளரின் கருத்துருவின் மீது "பரிந்துரைக்கப்பட்டது" எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

3) குழுவின் பரிந்துரைகளை ஏற்று, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) வர்த்தகப் பொருளியலில் இளங்கலைப் பட்டத்தினை, வேலை வாய்ப்பிற்காக மற்ற அனைத்து பல்கலைக் கழகங்களினாலும் வழங்கப்படும் (செமஸ்டர் மற்றும் செமஸ்டர் அல்லாத) பொருளியலில் இளங்கலைப் பட்டத்திற்கு இணையாக கருதி அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அருள்மொழி
அரசு செயலாளர்.(பொறுப்பு)

பெறுநர்
செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
பதிவாளர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பல்கலைநகர், மதுரை 625021.
அனைத்து அரசுச் செயலர்கள், சென்னை–9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்,
அனைத்து பல்கலைக்கழகங்கள்.

நகல்

முதலமைச்சர் அலுவலகம். சென்னை–9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலுள்ள அனைத்து பிரிவுகள், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 16/8/05

P+AR (S) dept
May be lodged
19 8 05